## (ஆ) மதுரை-இலங்கைக்கு புதைவட கேபிள்மூலம் அல்லாமல் உயர்மின் கோபுரம் வழியாக மின்சாரம் கொண்டு செல்லுதல் குறித்து

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், உட்காருங்கள்.* (குறுக்கீடு) *எல்லாம் முக்கியமானதுதான், உட்காருங்கள்.* (குறுக்கீடு) *நான் சொல்வதைக் கேளுங்கள்.* (குறுக்கீடு) *நான் சொல்வதை தயவுசெய்து கேளுங்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் எவ்வளவு நேரம் கேட்டாலும், நேரம் இருந்தால் வாய்ப்புத் தரமுடியும்.* House-ல்... (குறுக்கீடு) *இல்லை, நீங்கள் பேச வாய்ப்பு கேட்கும்போதெல்லாம் என்னால் வாய்ப்பு தரமுடியாது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் ஒரு தகவலுக்காக தெரிவிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மதுரையிலிருந்து ஸ்ரீலங்காவிற்கு* cable *வழியாக மின்சாரம் கொண்டு செல்வது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, ஏன் அதற்கு மாற்று வழியை ஆராயக் கூடாது என்ற கேள்வியைக் கேட்டிருந்தார்கள். இரண்டு, மூன்று நாட்களாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவையில் இருக்கும்போது பதில் சொல்லலாம் என்று நினைத்தேன். இப்போது இருப்பதால் அதற்குப் பதில் சொல்கிறேன்.* Underground cable *வழியாகக் கொண்டு செல்ல முடியாது என்று இப்போது மத்திய அரசுக்கு அந்த* technical committee *பதில் அனுப்பியிருக்கின்றது. கடலிலேயே நாம் உயர்மின் கோபுரம் வழியாகத்தான் கொண்டு செல்ல முடியும்.* Cable *மூலமாக எடுத்துச் செல்ல முடியாது. ஏனென்றால்* Cable *மூலமாக எடுத்துச் செல்ல வேண்டுமானால் கடற்கரையில் ஒரு* factory *ஏற்படுத்தி,* Cable-*ஐ நாங்கள் உற்பத்தி செய்து அதைக் கப்பலில் கொண்டுவந்து, கப்பல் மூலமாகக் கொண்டு செல்ல வேண்டும். அதனால் அப்படிச் செய்ய முடியாது என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், அதற்குக் கிட்டத்தட்ட ஏழு மடங்கு செலவாகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழு மடங்கு செலவானாலும்கூட,*

அதற்கு technical committee ஒத்துக்கொள்ளாத காரணத்தினால், over head cable மூலம் எடுத்துச்செல்வதுதான் சரியாக இருக்கும் என்று இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னர் அறிக்கை கொடுத்திருக்கிறது. எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சொல்லிக்கொள்வது என்னவென்றால், இப்போது உயர்மின் கோபுரத்திற்கு மாற்றாக UG ஆக போட முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்குள்ள விவசாயிகளிடம் தொடர்ந்து ஏதாவது ஒரு போராட்டத்திற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது சுமுகமாகச் சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நாட்டினுடைய நலனுக்காக, தமிழ்நாட்டினுடைய நலனுக்காக கொஞ்சம் அவர்களிடத்திலே பேச வேண்டும். அங்கிருக்கின்ற விவசாயிகள் அரசோடு ஒத்துப்போவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் நஷ்ட ஈடு மட்டும் அதிகமாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை சுமுகமான முறையில் முடிவடைகின்ற சூழ்நிலையில் இதுபோன்ற ஒரு போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்தோம் என்று சொன்னால், தமிழகத்தின் நலன்தான் பாதிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் நான் தகவல் கோரலுக்கான பதில் என்ற அடிப்படையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உயர்மின் கோபுரம் அமைப்பதில் உள்ள பிரச்சினை குறித்து இங்கே சில விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு எங்களை சமாதானப்படுத்துவதைவிட, நாங்கள் திருப்தியடைவதைவிட, பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்கள் சமாதானம் அடைய வேண்டும்; திருப்தி அடைய வேண்டும். எனவே, இதில் சம்பந்தப்பட்ட விவசாயிகளை, போராடக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களை அழைத்து நீங்கள் ஏன் பேசக் கூடாது? ஆகவே, பேச்சுவார்த்தை

நடத்தி சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது உங்கள் கடமை. ஆக, அதை நான் இங்கே வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொன்னேன். எங்களோடு விவசாயிகள் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளை வரச்சொல்லி, 'இந்தத் திட்டத்தை நிறுத்திவிடுகின்றோம், ஆகவே நீங்கள் அந்த இடத்திற்கு அனுமதி அளிக்காதீர்கள்.' (குறுக்கீடு)

**திரு. V. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நான் பேசிக்கெண்டிருக்கிறேன். ஏன் குறுக்கிடுகிறீர்கள்? என்ன நடைமுறை இது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் யார் அதைக் கேட்பதற்கு? கட்சி மாறி வந்தவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது நாங்களெல்லாம் அமைதியாக இருக்கிறோம். இது ஒரு முக்கியமான பிரச்சினை. இந்த முக்கியமான பிரச்சினைக் குறித்து பேசுகின்றபோது, அதை நாங்கள் அமைதியாக இருந்து கேட்டுவிட்டு, அதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு இங்கே அவையில் ரகளை ஏற்படுத்துவதற்காகக் குரலை கொடுக்கின்றார். அவரின் இந்த நடவடிக்கையை இந்த அவையின் மரபை மீறிய செயலாக நான் கருதுகின்றேன் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் இருங்கள். நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேச வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத்தான் சொன்னார். அவர் சொன்ன விளக்கத்திற்கு, நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பேச வாய்ப்புத் தந்தேன். அவர் அந்த விளக்கத்திற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆகவே, அவர்கள் இருவரும் சுமுகமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது (குறுக்கீடு) இல்லை, குறுக்கே ஓர் உறுப்பினர் திடீரென்று எழுந்து பிரச்சினையை வேறு மாதிரி, அது எதுவாக இருந்தாலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே கேட்டால், அதற்குரிய விளக்கத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அதை நீங்களே கேட்கலாம். நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போதே, உங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திடீரென்று பேசுவது, முறையில்லை. சரியுமல்ல, அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் சொல்லுங்கள். நீங்களும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களும் சுமுகமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்கிறபோது, 'அங்கே இருக்கக்கூடிய சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அதனால்தான் எங்களுடைய உறுப்பினர் அவர்கள் அதை மறுக்க

வேண்டுமென்பதற்காக எழுந்தாரே தவிர, வேறொன்றுமில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி பேசுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைதியாக முழுவதையும் கேட்டுவிட்டு, பிறகுதான் பதில் சொன்னார். அவர் பதில் சொன்ன பிறகு, மீண்டும் ஒரு விளக்கத்தைக் கேட்டார்கள், அதற்கும் அவர் பொறுப்பாகப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருக்கு அந்தப் பதிலில் ஏதேனும் ஆட்சேபணையிருந்தால், அமைச்சர் பேசி முடித்த பிறகு, அந்தக் கேள்வியை உங்கள் மூலமாகக் கேட்க வேண்டும். அதை விடுத்து மிகவும் தரக்குறைவான நிலையில் 'ஏய்' என்று பேசுவது எந்தவகையில் நியாயம்? (குறுக்கீடுகள்) யாராவது உறுப்பினர்கள் பேசுகின்றபோது, உங்களிடம் கேட்டுத்தான் பேச வேண்டும். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் பேசும்போது, அவரை கைநீட்டிப் பேசுவது எந்தவிதத்தில் நியாயம்? இது முறையான செயலா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் கண்டித்தேன். கண்டிக்கிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு, அவருடைய விளக்கத்திற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புக் கொடுத்து, அவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். திரும்பவும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைச் சொன்னார். திரும்பவும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டால், நான் அவருக்கு வாய்ப்புத் தருவதற்கு தயாராக இருக்கிறேன். அதற்கு இடையிலே பின்னாலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி திடீரென்று பேசுவது முறையில்லை. பேச வேண்டுமென்று விரும்பியிருந்தால், கையை உயர்த்தியிருக்கலாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை அதற்கு என்ன செய்வது? நீங்கள், வாய்ப்புக் கேட்டிருந்தால்-நான் அனுமதித்து, அவர் அதற்கான விளக்கத்தைச் சொன்னார், அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்.

*2019 ஜுலை 19]* *[பேரவைத் தலைவர்]*

*மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போதே இடையிலேயே பேசுவது முறையல்ல, அது சரியும் அல்ல. அது இந்த அவையின் மரபுக்கு ஒத்துவராது. ஆகவே, இதுபோன்ற செயலை திரு. செந்தில் பாலாஜி அவர்கள் இனிமேல் செய்யக் கூடாது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நான் மனப்பூர்வமாக, முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். அதில் எந்த மாறுபாடும் கிடையாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது எப்போதும் பொறுமையாகத்தான் சொல்வார், யாரையும் சீண்டிவிடக்கூடிய நிலையில் எப்போதும் பேச மாட்டார் என்பது எனக்கும் தெரியும், இந்த அவைக்கும் தெரியும். ஆனால், இடையில், தேவையற்ற வகையிலே, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொச்சைப்படுத்துகிற வகையிலே ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். ஆக, அது தவறுதான். நீங்கள் சொல்வதுபோல் ஓர் உறுப்பினர் அதை ஆட்சேபிக்கிறபோது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, உங்களிடத்திலே நேரத்தைக் கேட்டு, உங்களிடத்திலே வாய்ப்பைக் கேட்டு, சொல்லியிருக்க வேண்டும். நானும் அதற்காக வருத்தப்படுகிறேன். அது தவறுதான். ஆகவே, அந்த வார்த்தையை தயவுகூர்ந்து, அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஏற்கெனவே உயர்மின் கோபுரம் அமைக்கப்பட்ட இடத்தில்* tubelight-ஐ *பிடித்துக்கொண்டு இப்படித்தான் பாதிக்கும் என்று சொன்னால், விவசாயிகள் பீதி அடைவார்களா, மாட்டார்களா? உங்களுடைய ஆட்சியில் நிறுவப்பட்ட உயர்மின் கோபுரங்கள் நிறைய இருக்கின்றன. புதிய, புதிய அனல் மின் நிலையங்களை நாம் உருவாக்குகிறோம். நீண்ட காலமாகத் துவங்கப்படாத திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றைத் துவக்க வேண்டும் என்று நீங்கள்கூட கேட்டீர்கள். துவக்க வேண்டுமென்றால் எப்படி மின்சாரத்தை கொண்டு போக முடியும்? மின் கோபுரம் அமைத்து,*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 19

மின் பாதை இருந்தால்தான், மின்சாரத்தை எடுத்துச் செல்ல முடியும். ஆகவே, எந்த ஆட்சியாக இருந்தாலும், மக்களுடைய நலன் கருதி எடுக்கப்படுகின்ற முடிவிற்கு அனைவரும் ஒத்துப்போக வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். ஏற்கெனவே இந்த அவையிலே சொன்னார். ஏற்கெனவே உயர்மின் கோபுரம் அமைக்கப்பட்ட இடத்தில் tubelight-ஐ பிடித்துக்கொண்டு எரிகிறது என்று சொல்கிறார்கள் என்று சொன்னார். இன்னும் உயர்மின் கோபுரம் அமைக்கவேயில்லை. இன்னும் அந்தப் பணியை மேற்கொள்ளவேயில்லை. அதற்கு முன்பாகவே, இப்படிப்பட்ட ஒரு பீதியை உருவாக்குகின்றபோது, விவசாயிகளிடையே அச்சம் ஏற்படும். அதைத்தான் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் பேசினார். அந்தப் பகுதியிலே பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரண்டு, குழுவாக இருந்து இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு பதிலாக, பேச்சுவார்த்தையை நடத்திக்கொண்டிருக்கிறார். அது நடத்தினால் தவறே கிடையாது. ஆக்கபூர்வமான பணிக்கு உதவியிருந்தால் தவறு கிடையாது. ஆனால், இதை நிறுத்த வேண்டுமென்கிற அடிப்படையிலே செயல்படுகின்றபொழுதுதான், அதைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தெரிவித்தார் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல யார் பெயரும் தெரியாமல் குற்றச்சாட்டு சொல்லமாட்டேன். நான் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். எங்கள் தொகுதியிலே ஒரு விவசாயியிடத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தொலைபேசியில் பேசி, அந்த விவசாயி அதனைப் பதிவு செய்து, என்னிடம் கொண்டு வந்து காலையில் காட்டினார். இப்படிச் சொல்கிறாரே, "ஒருவேளை வராமல் நின்று போய் விடுமோ? நான் உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, நாளையதினம் மற்றவர்கள் இடத்திலெல்லாம் வராமல்,

நான் பேசாமல் இருந்து விட்டேன் என்பதால், என்னுடைய இடத்திற்கு வந்து விட்டால், எனக்கிருக்கின்ற தோட்டமே ஒரு ஏக்கர்தான்'' என்று சொன்னார். 'எனக்கு இதுகுறித்துப் பேச வாய்ப்பில்லை, இரண்டு, மூன்று நாட்களாக நான் வாய்ப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்; பேச முடியாமல் போய் விட்டது. இன்றையதினம் வாய்ப்பிருந்தால் நான் பேசுகிறேன்' என்று அவரிடம் நான் சொன்னேன்.

நான் யாரையும் குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. நீங்களும் சரி, நாங்களும் சரி. நாட்டின் நலனுக்காகவும், மக்களுக்குச் சேவை செய்வதற்காகவும்தான் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஏன் அவர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு நீங்கள் அறிவுரை கூற வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன். தூண்டி விடுவதாக என்று நான் சொன்னது, உங்களுக்கு மன உறுத்தலாக இருக்கிறது என்றால், அதனை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. தமிழகத்தில் உள்ள மக்கள் நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக, மின் வெட்டு இல்லாத மாநிலமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அதை அமைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் இந்த அளவிற்கு கேட்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் tubelight-ஐ காட்டிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அது நாங்கள் அமைத்த tower அல்ல. அது உங்கள் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட tower. நான் அன்றையதினமே இதுகுறித்து விளக்கமாகச் சொல்லியுள்ளேன்—இப்போது tubelight எரிகிறது என்று சொன்னால் அது alternative current ஆகும். அதில் light எரியலாம். சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து இங்கு வருவது direct current. ஆனால், direct current-ஐப் பொறுத்து நான் ஏற்கெனவே சொன்னதுபோல் தாராபுரம் வரை—நான் நேற்றையதினம் டெல்லி சென்றபோது, மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள், 'நாங்கள் மற்ற மாநிலங்களை எல்லாம் விட்டுவிட்டோம். உங்கள் மாநிலத்தில் மட்டும் ஏன் இவ்வளவு பிரச்சினை, உங்களுக்குத்தான் நாளை அதிகமான தொகை வரப்போகின்றது. அதனால் சீக்கிரம் முடித்து விடுங்கள்' என்று என்னிடத்தில் கேட்கின்றார். நான், அதற்காகத்தான் இன்றையதினம் சொல்லவே வந்தேன். மாண்புமிகு

சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகளவில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மீண்டும், மீண்டும் கொடுத்துக்கொண்டேயிருக்கிறீர்கள். உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் தடுப்பதாக நான் சொல்லவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும், மீண்டும் அந்தக் கூட்டத்தைப்போட்டு, அந்த விவசாயிகளை, 'நீங்கள் விடாதீர்கள்' என்று சொல்கின்றபோதுதான், தமிழகத்தின் நலன் பாதிக்கப்படக்கூடும் என்ற அடிப்படையிலேதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சொல்ல வேண்டிய கடமைக்காக சொன்னேன்.

## (இ) அரசு விழாக்களுக்கான அழைப்பிதழ்கள் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறாதது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இந்த விவாதம் இதோடு போதும். (குறுக்கீடு) இன்றைக்கு காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை பற்றிய இரண்டு முக்கியமான மானியக் கோரிக்கைகள் உள்ளன. அந்த இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கும் அதிக நேரம் ஆகும். அதுமட்டுமல்ல, இதில் தொடர்ந்து பேசினால், பெரிய விவாதமாகப் போகும். அதற்கு மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை உள்ளது. மேலும், இன்று மாலையில் ஒரு விழா இப்பேரவையில் நடக்க இருக்கிறது. அதில் நீங்கள் எல்லோரும் கலந்துகொள்ள வேண்டும். ஆகவே, விவாதம் தொடர்ந்து வேறு வகையில் போவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடு) இல்லை, நான் வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் திரு. பிரின்ஸ், எல்லா உறுப்பினர்களும் தங்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும் என்று கேட்டால், கொடுப்பதற்கு எனக்கு இன்று நேரம் இல்லை. நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு நான் அனுமதித்தேன். இன்றைக்கு அதற்கான வாய்ப்பு இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முக்கியமாக ஏதாவது கேட்க விரும்பினால், வாய்ப்புத் தருகிறேன், சொல்லுங்கள்.